JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **201/2015** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 4** | Prosecution /Defence / Court | |
| Name | சதாசிவம் | Village | தோட்டத்து வலசு, |
| Father's Name | சென்னிமலை கவுண்டர் | Taluk | |
| | | Age | |

**A**2 **present**. **A**1, **A**3 **absent**. **Petition filed and allowed**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 24.02.2026.**

<u>**முதல் விசாரணை**</u>

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். நான் கரான்டிபாளையத்தில் 2006 – 2011 ம் ஆண்டு வரை வார்டு கவுன்சிலராக இருந்தேன். எனக்கு ஆஜர் எதிரி மற்றும் துரை என்கிற கருப்புசாமி, மஞ்சுளாவையும், அ.சா.1 விஜயகுமாரின் குடும்பத்தாரையும் எனக்கு தெரியும். 15.03.2015 ம் தேதி இரு தரப்பினர்களுக்கும் பிரச்சனை என்று எனக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார்கள். 16.03.2015 ம் தேதி மதியம் 2.00 மணியளவில் சம்பவ இடத்தை பெருந்துறை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்கள் பார்வையிட்டு படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார். பார்வை மகஜரில் முதலாவதாக நானும், இரண்டாவதாக ஜானகி ராமன் என்பவரும் சாட்சி கையொப்பங்களை செய்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பெருந்துறை சிறப்பு காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** சம்பவம் 15.03.2015 ம் தேதி இரவு 7.00 மணிக்கு நடந்ததாக நான் கேள்விபட்டேன் என்றால் சரிதான். நான் வார்டு கவுன்சிலராக இருந்ததால் அடிக்கடி சம்பவ இடத்திற்கு சென்று வருவேன் என்றால் சரிதான். 16.03.2015 ம் தேதி மதியம் 2.00 மணிக்கு நான் சம்பவ இடத்திற்கு செல்லும் போது போலீசார் அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான். போலீசார் வந்ததை எனக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார்கள் என்றால் சரிதான். யார் எனக்கு போன் செய்தார்கள் என்றால் புகார்தாரர் விஜயகுமார் தரப்பில் போன் செய்தார்கள். சம்பவ இடத்தில் நான் செல்லும் போது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் ஊரே அங்கு கூடி இருந்தார்கள்.

2. அங்கு புகார்தாரரின் சமூகத்தினர் அதிகமாக இருக்கிறார்கள் என்றும், எதிரிகளின் சமூகத்தினர் குறைவாக இருக்கிறார் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எத்தனை போலீசார்கள் இருந்தார்கள் என்றால் 2 பேர் இருந்தார்கள். அ.சா.ஆ. 2 ஆவணத்தில் என்ன எழுதினார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும். நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. அதன் பின்னிட்டு போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் வார்டு கவுன்சிலராக இருப்பதால் அதிகமாக உள்ள சமூகத்தினருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை